

# திரயுகோஷ்

2054
மார்கழி
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பட்டினப்பாலை - தமிழர்களின் பண்டைக்காலத் தமிழ் மற்றும் தமிழர்களின் வாழ்வியல் ஆவணம்



*திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். கடந்த இரு மாதங்களாக திறவுகோலில் எழுத முடியாமல் போனது. மன்னிக்கவும். தமிழரின் தொன்மையான, அறஞ்சார்ந்த, அறிவான வாழ்வியலை படம் பிடித்துக்காட்டும் காலக்கண்ணாடி, 301 அடிகள் கொண்ட பட்டினப்பாலை பற்றிய கட்டுரைத் தொடரில் கடந்த கட்டுரை வரை 290 அடிகளை ஆராய்ந்தோம், அறிந்தோம். முந்தைய கட்டுரைகளை வாசிக்க திறவுகோல் இணையதளத்தை பார்வையிடவும்.*

*இத்தருணத்தில் கடலுக்கடியில் உறங்கிக்கொண்டிருக்கும் தமிழரின் தொன்மையை தொட்டு காட்டி தனது வாழ்வுக்கு பொருள் கொண்டு சரித்திரத்தில் உறங்க சென்றுவிட்ட மதிப்பிற்குரிய ஐயா ஒரிசா பாலு அவர்களுக்கு புகல்வணக்கத்தை உரித்தாக்குவோம். பட்டினப்பாலை, பூம்புகார் என்றால் ஐயா ஒரிசா பாலுவின் நினைவுகளும் இனி நிச்சயம் வரும்.*

*இந்த இதழோடு 301 அடிகள் கொண்ட பட்டினப்பாலை தொடர் நிறைவடைகிறது.*

*கடந்த 290 அடிகளில் காவிரியின் பெருமை, மருத நிலத்தின் வளமை, காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வச் செழிப்பு, காவிரிப்பூம்பட்டினத்துத் தோட்டங்கள், தோப்புகள், பூஞ்சோலைகள், பொய்கை, ஏரி, காவிரிப்பூம்பட்டினத்து அட்டில் சாலைகள், மாட்டுக் கொட்டில், காவிரிப்பூம்பட்டினத்துத் தவப்பள்ளி வேள்விச்சாலை, விளையாட்டுக் களத்தில் மறவர்களின் போர், காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள ஒரு குடியிருப்பு, பரதவர்களின் இருப்பிடம், பரதவர்களின் வழிபாடும மற்றும் விளையாட்டு, சங்கமுக நீராடல், பகல் விளையாட்டு, காவிரிப்பூம்பட்டினத்து இரவு நேர நிகழ்வுகள், வரி வசூலிப்போர் தன்மை, பண்டசாலை முன்றில், மாளிகை அமைப்பு, விழா நீங்காத கடை வீதி, பல்வேறு கொடிகள், தெய்வக்கொடி, வீரர்களை வணங்குமிடத்தில் ஏற்றியுள்ள கொடி, பல் துறை சான்றோர் வாதிடும் இடத்திலுள்ள கொடி, கப்பலின் மேலேற்றப்பட்டுள்ள கொடிகள், கள் விற்கும் முன்றிலிலுள்ள கொடி, பல் கொடி விளங்கும் பட்டினம், பூம்புகாரின் செல்வ வளம் நிறைந்த வீதிகள், காவிரிப்பூம்பட்டினத்து உழவர்களின் நல் இயல்புகள், வணிகர் குடிச்சிறப்பு, பன்னாட்டினரும் இனிது உறையும் புகார், புலம் பெயர் மாக்கள், திருமாவளவனின் பெருமைகள், திருமாவளவனது*

போர்த்திறன், திருமாவளவன் உடற்றிய போரினால் மருத நில வளம் அழிதல், கந்துடைப் பொதியிலின் நிலை, விழா இன்றிக் கிடந்த பொது மன்றம், செழு நகரின் சீர் குலைந்த தன்மை, திருமாவளவனின் கருதியது முடிக்கும் திறல், திருமாவளவனின் வெற்றிச் சிறப்பு, வளம் பெருக்கிய வளவன் பற்றி கண்டோம்.

மேற்கண்ட சிறப்புகளை வாசிக்க திறவுகோல் இணையத்தில் முந்தைய மின்னிதழைகளை வாசிக்கவும்.

தொல்காப்பிய காலத்துக்கு முந்திய திணை பாகுபாடுகள், அகவாழ்க்கை என்னும் அகத்திணையை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழாகவும், புறவாழ்க்கையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழாகவும் பாகுபடுத்தியுள்ளது.

இந்த பாகுபாட்டு வகையில் பெரும்பாணாற்றுப்படை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் புலவரின் நோக்கம் பட்டினப்பாலையில் கரிகாற் சோழனை சிறப்பித்துப் பாட வேண்டும் என்பது தான்.

ஆனால் நேரே பாடினால் அது புறத்திணை ஏழனுள் ஒன்றாகிய வாகைத்திணை வகையில் வரும். அவ்வாகைத்திணைப் பொருள் அமையப் பாடி இப்பாட்டினுள் அகத்திணை ஏழனுள் ஒன்றாகிய பாலைத்திணை பொருள்பட இதனை அகப்பொருட் பாடலாக பாடி அகத்திணை பட்டியலில் சேர்த்தது இந்நூலின் சிறப்பு. பாலை என்பது குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் அகத்திணை ஒழுக்கங்களுள் ஒன்று.

இப்பட்டினப்பாலை இறுதி இதழில் திருமாவளவனின் புற வாழ்வும் அக வாழ்வும், தலைவன் தலைவியைப் பிரியாமைக்கான காரணங்கள் பற்றி பார்ப்போம் .

திரு நிலைஇய பெரு மன் எயில்,
மின் ஒளி எறிப்பத் தம் ஒளி மழுங்கி,
விசி பிணி முழவின் வேந்தர் சூடிய
பசு மணி பொருத பரு ஏர் எறுழ்க் கழல் கால்,
பொன் தொடிப் புதல்வர் ஓடி ஆடவும், 295
முற்று இழை மகளிர் முகிழ் முலை திளைப்பவும்,
செஞ் சாந்து சிதைந்த மார்பின் ஒண் பூண்

திருமாவளவன் தான் வென்ற முரசு முழங்கும் பெருமை வாய்ந்த பகைவேந்தர் கிரீட பொன்னால் செய்த கழலுக்குள் பகைவர் தம் முடியில் அணிந்திருந்த மணிகளைப்

பதித்து, அதனை அணிந்த  அவனது புதல்வர்கள் அந்தக் கழலொலி கேட்க ஓடியாடி விளையாடுவதைக் கண்டுகளித்தான்.

திருமாவளவன் போருக்கு எழுந்தபோது வேறு எந்த மன்னரையும் கூட்டு சேர்த்துக் கொள்ளவில்லை. தனி ஒருவனாகவே போரிட்டு வெற்றி கண்டான். செல்வ வளம் மிக்க இவனது கோட்டை புகழ் மின்னலை போல எட்டுத்திக்கும் வீசியது. அதனால் பிற மன்னர்களின் புகழ் மங்கிப் போயிற்று.

முற்றிழை - வேலைப்பாடு திருந்திய அணிகளை அணிந்தவள் என்பது பொருள். திருமாவளவன் தன் முற்றிழை மனைவியரின் மார்பில் மகிழ்ந்து திளைத்தான். அப்போது மனைவியரின் மார்பிலிருந்த செஞ்சாந்து சிதைந்து இவன் மார்புச் சந்தனத்தைச் சிதைத்தது.

அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன் 300
கோலினுந் தண்ணிய தடமென் தோளே.

தலைவன் பொருள் தேட தலைவியை  பிரிந்து செல்ல நினைக்கின்றன். பிரிந்து சென்றால் தன் காதலியின் நிலை என்னவாகும்? அவள் தன் பிரிவைப் பொறுப்பாளா? தான் திரும்பும் வரை அவள் உயிர்கொண்டு உறைவாளா? என்ற ஐயம் அவன் உள்ளத்திலே எழுந்து அவனை வருத்துகின்றன.

பிரிந்து சென்றால் தானும் ஒருமத்தோடு, மன அமைதியோடு சென்ற இடத்தில் செயலாற்ற முடியாது. வேதனைதான் மிஞ்சும்; வேதனையோடு செய்யும் செயலில் வெற்றிகாண முடியாது. ஆகையால் பிரிவு காதலிக்குத் துன்பம் தருவதோடு தனக்கும் துன்பத்தைத் தரும் என நினைக்கிறான்.

இதனால் "திருமாவளவன் சிங்கம்போல் பகைவர்களைத் தாக்கி வெல்லும் திறம் கொண்டவன். நான் பிரிந்து செல்ல நினைக்கும் காட்டு மார்க்கம், வளமும் சிறப்பும் வாய்ந்த பூம்புகார் பட்டினத்தின் புகழ் ஒளி பரப்பும் திருமாவளவன் கரிகாற்சோழன் பகைவர்களைச் சாய்க்க ஓங்கிய வேல் போல் பொருளுக்காக தலைவியை  பிரிந்து செல்ல விரும்பிய கானம் சுட்டெரிக்கும் வெம்மை உடையது" என  எண்ணுகிறான்.

காதல் கண்ணை மறைக்கும் என்பார்கள். இதுதானோ என்னவோ, மேலும் "என் காதலியின் மெல்லிய தோள்கள் அந்தக் கரிகாற்சோழனுடைய செங்கோலைக் காட்டினும் குளிர்ச்சியைத் (நன்மையை, இன்பத்தை) தருவன." என குமைகிறான்.

இறுதியில் "நீங்காத சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினமே கிடைப்பதா இருந்தாலும் கூட என் காதலியை விட்டுப் பிரிந்து வரமாட்டேன். என் மனமே! பிரிந்து போகவேண்டும் என எண்ணுவதை மறந்துவிடு".

என்ற முடிவுக்கு வருகிறான். இதுவே பட்டினப்பாலையின் அகப்பொருள் கருத்தாகும்.

மிகச்சிறந்த பெருமையுடைய திருமாவளவனால் ஆளப்பட்ட பூம்புகார்ப் பட்டினத்தைப் பரிசிலாகத் தந்தாலும் தலைவியைப் பிரிந்து வாரேன் என்றமையால் தலைவியைப் பிரியும் பிரிவுக்கொடுமையை இந்நூலுள் வைத்துப் பாலைத்திணையின் ஒழுக்கத்தை இந்த நூலில் உருத்திரங்கண்ணனார் சிறப்புடன் பாடியுள்ளார்.

சங்ககால கரிகாலனின் வரலாற்றை படித்த உங்களுக்கு சமகால ஈழத்து கரிகாலனின் போரும் வீரமும் நினைவில் நிழலாடுவது மனத்தமிழனின் இயல்பு.

தற்கால வாழ்க்கையை எண்ணி பார்த்தால் பட்டினமல்ல பரிசுப்பொருள் தந்தாலே பாம்புக்கும் பலியாக பலர் உள்ளனர். அரசியல் வாதிகள் சொல்லவே தேவை இல்லை. சீட்டுக்கும் நோட்டுக்கும் நாட்டுக்கு ஒவ்வா  செயலை ஒரு குற்ற உணர்ச்சியுமின்றி செய்துமுடிகின்றனர்.

பட்டினப்பாலை அகவொழுக்கம் அறிய விழைவார்க்கு காதலை  இலக்கியச்சுவையுடன் விளக்கும் நூலாகவும், யாப்பியல் நுட்பம் அறிய விழைவார்க்கு வஞ்சிப்பா ஆசிரியத்தால் அமைந்த செய்யுளாகவும் விளங்குகின்றது.

மேலும், பண்டைத்தமிழரின் வாழ்வியல் அறிய விழைவார்க்கு வாழ்வியல் விளக்கும் நூலாகவும், பண்டைக்கால வாணிகம் அறிய விழைவார்க்கு வாணிகம் அறிவிக்கும் நூலாகவும், வரலாறு அறிய விழைவார்க்குக் காவிரியின் வரலாறு, திருமாவளவனின் வரலாறு தாங்கி நிற்கும் நூலாகவும் விளங்கி நிற்கின்றது.

பட்டினப்பாலையில் கூறப்படும் காவிரியின் சிறப்பு, காவிரியை உரிமை கொண்டாடும் வேறெந்த மொழியிலும் இல்லை. இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம் காவிரி யாருக்கு சொந்தம் என.

மொத்தத்தில் தமிழர்களின் பண்டைக்காலத் தமிழ் மற்றும் தமிழர்களின் வாழ்வியல் ஆவணமாக இந்நூலைக் குறிப்பிடலாம்.

இந்நூலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை ஆதாரத்துடன் மெய்ப்பிக்க தமிழ் ஆராச்சியாளர்கள் பல தடைகளை தாண்டி முயன்று வருகின்றனர். தெய்வத்தமிழ் தன்னை தக்க வைக்கும். தமிழர்களை அற வழியில் வாழ வைக்கும்.

இதுவரை நேரம் ஒதுக்கி வாசித்த அனைத்து திறவுகோல் வாசக அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. அடுத்த இதழில் சந்திப்போம்.

—

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.

---

## குறுங்கவிதை

மழையோய்ந்த மண்சாலை
தெறித்து விழும் பள்ளத்துச்சேறு
மௌனமாய்ப் பூச்செடி...

கார்த்திகைமாத அடைமழையில்
மூழ்கும் டெல்டா நாற்றுவயல்
கொஞ்சம் ஓய்வெடு மழையே!

நீர்க்குளத்தில் தாவும் தவளை
கலையும் நிலவின் பிம்பம்
மௌனமாய் வானம்...

—

ஸ்ரீவி. முத்துவேல்,
துபாய்.

உமிழ்நீர் ஊற்றி
உன் உதட்டின்
வரிகளில்
அச்சிடிட்டுருக்கிறேன் என் காதலை
நன்றாக
பதியவில்லை
என்றால் சொல்லிவிடு
மீண்டும் ஒருமுறை முயற்சிக்கிறேன்.

—

G. சூர்யகலா சரவணன், B.E
கண்டிதம்பேட்டை.



## சொற்களைத் தேடி

பூக்களிடம் யாசிக்கிறேன்
புன்னகையைப் பரிசளித்தது பூ
பட்டாம்பூச்சியிடம்
வார்த்தைகளைக் கேட்டேன்
நிறங்களில் ஆகாயத்தை
எட்டவைக்கிறது.
சொற்களைத் தேடி காற்றிடம் நிற்கிறேன்
உயிர்ப்பின் மூச்சை ஒப்படைத்து
வெளியை வட்டமிடுகிறது
பேசிப்பழக வானத்திடம்
எழுத்தை வேண்டுகிறேன்
வெளிச்சப் பகலையும்
விண்மீன் ஒளிர்ப்பையும்
விரித்துக் காட்டுகிறது.
சொற்களின் கவனத்தை
அஃறிணைகள் கற்றுத்தர
வார்த்தைகளைப் பிடித்தபடி
உரையாடத் தொடங்குகையில்
எல்லா சொற்களுக்கும்
இல்லாத அர்த்தங்களைக் கூறி
உள்ளே கிடந்த பண்புகளை
வெளியேற்றி விடுகின்றன
உயர்திணைகள்.

## மரத்தைத் தாங்கியபடி

நிற்கும் என் கனவில்
மலர்களைச் சொறிந்தபடி
சிரித்துக் கிடக்கின்றன
கிளைகள்.
வேரின் தவத்தைக் கலைக்காமல்
கூடுகளில் இளைப்பாறும் பறவைகளும்
நீரின் வளத்தை அறிந்தபடி
ஈர்க்கும் தண்டும்
வளர்த்து விடும் மரத்தின் மேனியில்
பெயரை வெட்டும் கரத்தில்
பிசுபிசுக்கும் ஈரம்
எழுப்பி விடுகிறது அறியாமையை.

## வரையத் துடிக்கும் மகளின் கரத்தில்

தயாரானது தூரிகை
தேடும் விழிகளுக்குள் பிடிபடாத
வனத்தின் வண்ணங்களை
கையிலேந்தியபடி விரியும் ஓவியத்தில்
தும்பிக்கையை உயர்த்தி
பிளிறத் தொடங்கியது வனம்.

## கூர்தீட்டப்பட்ட

கல்லில் வைத்திருக்கும்
விலங்குகளின் வேட்டை.
இழுத்துச் செல்கிறது
இன்னொரு உலகத்திற்கு.
தாவரத்தின் நார்களுக்குள்
அம்புகளைக் கூட்டி
நடை பயணத்தில் வனத்தை அளக்கும்
மனிதனின் ஆசைக்குள்
உருண்டு கிடக்கின்றன
குருதியின் ஓட்டம்.
மரத்தின் கிளையிலிருந்து
தாவித் தாவி
விமானத்தில் ஏறிய மனிதனுக்கு
நாடுகளைப் பிடிக்கும் பேராசை
தூண்டில் போடப் போட
மனங்களைப் படிக்க முடியாமல்

மருந்துகளுக்குப் பின்னாலும்
குண்டுகளைச் சுமந்தபடியும்
ஓடிவிட முடிகிறது.

## சொற்களைக் கண்டறிதலில்

இளைப்பாறுதல்
சோம்பலைக் கூட்டுகையில்
இடரும் எழுத்துகள்
எழுந்து வருகின்றன.
உள்முக தரிசனத்தை
உதிக்கச் செய்யும்
சொல் இல்லாத போது
உயிரைத் துறந்து விட்ட வார்த்தைகள்
சிந்தனைக்குள் சிறைபடுகின்றன.
விழிவழிப் பருகும்
பேரின்பமென நிம்மதி அடைகின்றன
வார்த்தைகள் பொருந்திய வரியும்
வாழ்வை நிறைத்த கனவும்.

—

இளையவன் சிவா,
நரசிங்காபுரம்



---

## என்னவளே.....

பார்த்தவுடன் சிறு மத்தாய்பாய் மனம்...

உன்னை பார்த்தவுடன் நெஞ்சில்
பொறிகின்றது....

உன் காந்த பார்வையை
எதிற்கொண்டவுடன் மனதில் ஆய்யிரம்
இளையராஜா ஒன்று சேர்ந்து வாசித்தார்
போல் ஒரு சங்கீதம் சங்கடமின்றி
என்னை ஆர்ப்பரிக்கிறது.

நிலவே...
தென்றலே...
என்று புனை வசனங்கள் உச்சரிக்க
மனமின்றி அமைதியுடன் உன்னை
ஆராதிக்க தொடங்குகிறது மனம்...

அட ஏதனோடு ஒப்பிட்டு பார்ப்பது
உன்னை என்று பித்து பிடித்து
தவிக்கின்றது என் தமிழ்..

ஏன் என்றால் ஒப்பனை அள்ளாதவள்
அல்லவா நீ...

—

கவிபாரதி,
சதீஷ்

# கீற்றோடு சிறு சூரியன்

எனது பால்யத்தின் கனவுகளெல்லாம்
பக்கத்தில் நிற்பவனுக்கும்
கேட்பவனுக்கு கேளிக்கையாக
இருக்கலாம்
அவன் சிரிக்க பழகிவிட்டான்
எனை மறந்து-நான்
சிரிக்க பழகிக்கொண்டேன்
பழமையென்பது பசுமரத்தாணிதானே
பகுத்தெறியப்பட்ட பறவையின்
தானியமல்லவே....

நிச்சயம் அந்த படகில் நான்
பயணித்துள்ளேன்
கைகளால் அலைகளை
ஒதுக்கியுள்ளேன்
கரையேறியவர்களை கைக் கொடுத்து
கரையேற்றியுள்ளேன்
ஆனாலும் திரும்பவில்லை
கரம் நனைத்த அலையொன்று....

எதற்காக இந்த நிலை
என எண்ணும் பொழுதெல்லாம்
மேலே பருந்தும்
கீழே தட்டானும் பறந்து செல்கின்றன...

மண்புழுக்களின் இறப்பிலெல்லாம்
ஒரு தாவரமும்
சிறியதோ பெரியதோ
ஒரு மீனொன்று சிக்கிவிடுகின்றன

விருட்சம் படரும் பொழுதெல்லாம்
யாரோ ஒரு கிழவன் துப்பிவிட்டுப்
போன விதைதான் ஞாபகத்துளிருடிகிறது

# நேரம்



ஒவ்வொருவரின்
கையிலும் ஓர்
கைக்கடிகாரம்
நேரத்தை மட்டும்
இழுத்துகட்ட
இயலுவதில்லை

முட்களை பார்க்கும் பொழுதெல்லாம்
முன்செல்பவரும்
பின்செல்பவரும் தவறாமல்
தொக்கிக் கொள்கின்றனர்
வரிசையில்....

நான் யாரிடமும் நேரத்தை கேட்க
விரும்புவதில்லை
எனது நேரத்தை பத்திரப்படுத்திக்
கொள்வதில் மட்டுமே
நான் முழுமூச்சாய் இறங்கி செலகிறேன்

இன்றைய நொடிகளை
அடுத்த நிமிடத்திற்கும்
இடையில் மிஞ்சிய நிமிடங்களை
அடுத்த மணிக்கும்
கடத்தி நகர்கையில்
தானாய் புரள்கிறது
நாட்களை உண்டதோர் வருடங்கள்....!

# எனக்கு இன்னொரு பேரிருக்கு..!

நீ சிரித்து செல்கிறாய்
நான் முறைத்து செல்கிறேன்
கெட்டவனாகிய என் சிரிப்பில்

உன் சிரிப்பு நல்லவனாய்
ஊர்சிதபடுத்திவிடுகிறது உன்னை...

நான் முறைப்பதால்
நீ நல்லவன்
நீ சிரிப்பதால் நான் கெட்டவன்..

ஒருவருக்கொருவர்
முறைத்து
சிரித்து சென்ற வேளையில்தான்
கைகள் குலுக்கிக் கொள்கின்றன
கண்கள் புன்னகைக்கின்றன
பரிசுகள் இடமாற்றபடுகின்றன
நீயோ நானோ
இருசுபாவங்களை மட்டுமே
பரிசிளித்துக் கொண்டுள்ளோம்.....

என்னுள் யாரோ
கடப்பாறையை சிறியதாக்கி
ஆணியெனக்கூறி
உச்சிமுதல் பாதம்வரை
நீ யாரென
சொல்லி சொல்லி
இறக்குகிறான்

வழியும் இரத்த சொட்டுகளில்
யாரென்றே அறியாத
வாடைகளின் உச்சத்தில் நிச்சயம்
நான் யாரென்று தெரிய
திகட்டுகிறது

இருப்பினும் மீண்டும் சிரித்து
மீண்டும் முறைத்து
சொல்லிக் கொள்கிறேன்
ஆக்ரோசமாய்

எனக்கு இன்னொரு பேரிருக்கு...!

# காதலிசம்

மழை பொழிய ஆரம்பித்துவிட்டது
உள்ளே நனைபவளுக்கு
குளிருடன் ஒட்டிக்கொள்கிறேன்
நான்

ஒவ்வொரு துளியாக
அடுக்கி வைத்த வானம்
வாசலில் கோலமிடும்
அவளின் நெற்றிப் பொட்டாய்
மாறியதென்ன....

தூரிகைகள் தேவையில்லை
விரல்கள் போதும்
வெட்கம் தேவையில்லை
விழியியல் போதும்

பாதச்சுவடுகளில் நிரம்பியது
பெருமழையின் பெரும் துளி
மின்னலோளி ஒடுகையில்
மிதித்து சிதறிய துளியொன்று

சிதறிக்கிடக்கும் நீரைச்சேர்த்து
ஒற்றையடி குழல் செய்தேன்
வானிலிருந்து பூமிவரை
ஊஞ்சல் செய்தாள் ஈரமாய்

# நினைவில் தப்பிய முகம்

எனது கனவுகளுக்கு
சிறு முத்தமிட்டு

இமைகளை திறக்கசெய்த
அந்த ஒரு முகத்தில் தான்
உனது முகம் புதைக்கப்பட்டுள்ளது...

பிரிக்க இயலாத
ஓரினை இதயங்களை
இடமாற்றி
மறைக்க இயலாத
மாபெரும் அன்பையும்
மறக்க இயலாத
சகா நினைவுறும் நினைவுகளையும்
அந்த முகம் தான் பிரதிபலித்தது....

தூரமோ
அருகாமையோ
இரு கண்களும்
நுனி மூக்கும்
செவ்விதழுமாய்
வட்டமிட்ட
முழு நிலவிற்கு
மறக்க தெரிந்த மனங்கள்
சபிக்கப்படுகின்றன....

உறக்கமோ
எழுகையோ
அப்படியே
அப்படியே
எப்படியும்- உயிரை
ஆர்ப்பரிக்கும்
தோலோடு உறித்து பருகும்
இதயம்
மூளையும் தேடும்
குருதில் வழிந்தோடி
நில்லாது நனைவில் தப்பிவிடுகின்று
பால் முகமொன்று....!

—

கவிஞர். சே கார்கவி,
நாகப்பட்டினம்.
*(Er. Prof. சே கார்த்திகேயன். ME)*
*SWD. Chennai*

---

# பாரம்

சாதி பிரிவினைகளையும் மக்கள்
கூட்டத்தையும் தராசு தட்டில்
ஏற்றினேன் -
வியப்பின்றி உயர்ந்தது மக்கள் நின்ற
தட்டு:

சாதி பிரிவினைகள் ஏராளமாயிற்றே -
அதனால் தான் கனத்தது, தராசு
தட்டோடு சேர்ந்து என் இதயமும்,...

—

பார்கவி. செ,
வல்லூர்,
மன்னார்குடி.



# அருட்பெருஞ்சோதி

கண்ணாடிக் குடுவைக்குள்
ஏற்றி வைத்த தீபத்திடம்
காணக் கிடைப்பதில்லை
காற்றின் பாடலுக்கு
அபிநயம் பிடிக்கும்
சுடரின் திருநடனங்கள்

அவள் ஏற்றி வைத்த
தீபத்தின் சுடர் ஒன்று
தீயின் நாவோடு
காற்றின் எச்சில் பட்டு
என்னிடம் ஏதேதோ
பேச முனைந்தது
மொழிகள் அற்ற ஒரு வெளியில்

திரியின் நுனியில்
சுடர் ஆடும் துணங்கைக்கு
எண்ணெய் சதங்கை ஆகட்டும்

தீபத்தின் சுடராயினும்
தீட்சண்யா குட்டியின் தலையாயினும்
குனிந்து தான் ஆக வேண்டும்
காற்றலையையும் கடலலையையும்
தலைக்கு மேல் முறையே கடத்த

அவள் கவிதை படிக்க
தலைகுனிவதைப் போலத் தான்
காற்றின் திசையைப் படிக்க
தீபச்சுடரும் தலைக்குனிகிறது

சுடரை அணைக்காமல்
காற்றுக்கு மட்டும் தான்
தீபத்தைத் தீண்ட தெரிந்திருக்கிறது

அவளைப் பொருத்தவரை
தீபங்கள்
அடர் இருளில் பாலைப் போல்
எண்ணெய்யை
மிடறு மிடறாகப் பருகும்
பூனைக்குட்டிகள்

எண்ணெய்யோ நெய்யோ
எவ்வளவு தான் இருந்தாலும்
சுடரைத் திரியின் நுனியில் நின்று
ஆட வைக்க
காற்றுக்கு கனிவு வேண்டும்

எப்போதும் நீ
என்னோடு இருக்க வேண்டும்
தீபத்தின் ஒளியோடு இருக்கும்
வெப்பம் போல

நிலத்தில் இருந்து எடுத்து
நதியில் தீபத்தை மிதக்க விட்டு
அவள் ஒன்று சேர்த்து விட்டாள்
நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்
அனைத்தையும்

மாமலையையும் மறைத்து விடும்
பேரிருளையும் வென்று விடும்
மணிமுடியில் ஏற்றிடும்
ஒரு தீபம்

முழுமதியையும் ஈரக் காகிதமாக்கும்
கார்த்திகைக் கடுமழையில்
இது அறுமீன் சேரும்
அகலிருள் நடுநாள்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்

# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள் - பகுதி 4 (ஆழ யோசிக்க வைத்த யோசினி)

மனிதப் பிறவி மகத்தானது. உடல் மற்றும் மனக் குறைபாடுகள் அற்ற பிறப்பே உத்தமமான ஒன்று என்பது என் தனிப்பட்ட கருத்து. மாற்றுத் திறன் கொண்ட மனிதர்களைக் கையாளுதல் மற்றும் புரிந்து கொள்ளுதல் என்பதும் அவர்களது துலங்கலுக்குத் தக்க எதிர்வினை புரிதல் என்பது சவாலான காரியமாகும்.

ஏனெனில், நாம் வாழும் இந்த சமூகத்தில் சக மனிதர்களுடனான ஊடாடலும் உரையாடலும் எத்தகைய வகையில் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்பது கற்றுத்தரப்படாத ஒரு கல்விப் பண்பாடாக உள்ளது.

குறிப்பாக, கேட்டல் மற்றும் பேசுதல் குறைபாடு மிக்க மாற்றுத் திறனாளிகளைத் திறம்படக் கையாளுதலில் இன்னமும் இந்த சமூகத்தில் பல்வேறு இடர்பாடுகள் இருப்பதை நாம் நன்கு அறிவோம்.

பிறவியிலேயே அத்தகைய மாற்றுத் திறன் கொண்ட ஒருவரை விரும்பி மணமுடித்து நல்லதொரு இல்வாழ்க்கை வாழ்வதன் அடையாளமாக அழகிய பிள்ளைச்செல்வத்துடன் இணைந்து பயணிக்கும் குடும்பம் தொழத்தக்கது.

குடும்ப குழு உரையாடல்கள், கதையாடல்கள் மற்றும் போதனைகள் அற்றுப்போன ஒரு தனித்தீவு வாழ்க்கையை வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு நம் ஒவ்வொருவரும் தள்ளப்பட்டுள்ளோம் என்பது உண்மை தானே?

அத்தகைய வறண்ட பாலை நிலத்தில் புதியதொரு குட்டி ரோஜாவாக என் கண்ணில் அன்று மிளிர்ந்தவள் எம் பள்ளியில் முதல் வகுப்பு பயிலும் யோசினி ஆவாள். அந்தத் துறுதுறு விழிகளும் இயற்கையாக அடர்த்தியும் நேர்த்தியும் மிக்க செயற்கை மை தீட்டப்பட்டது புருவங்களும் கொள்ளை அழகு. கூடவே குழி விழும் கன்னம். குழந்தைமை மாறாத அவளது வெள்ளந்தியான புன்சிரிப்பிற்கும் மழலை நிறைந்த பேச்சிற்கும் எதுவும் ஈடாகாது.
"யோசினி இங்கே வாயேன்!"

பட்டாம்பூச்சி போல் பறந்து அருகில் வந்தாள். கண்களில் ஒருவித துடிப்பு சுடர்ந்தது.
"ஆமா... உனக்கு அண்ணனா இருக்கான்?"

அவள் என் வகுப்பு மாணவி அல்ல. நான் பாடம் எடுக்கும் ஆறாவது வகுப்பிற்கு வர

இன்னும் நான்கு கல்வியாண்டுகள் இருக்கின்றன. அதனால் கீழ் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் குறித்த குடும்ப விவரங்கள் பெரும்பாலும் என் சிற்றறிவுக்கு எட்டுவதில்லை. வெளியில் எப்போதாவது பார்க்கும் சமயங்களில் அவர்கள் குறித்த செய்திகளைச் சேகரிப்பது பொதுவான வழக்கம்.

"இல்லையே!..."

சின்னஞ்சிறு பிள்ளைகளிடம் சரியான மரியாதையைப் பொதுவாக யாருமே எதிர்பார்க்க முடியாது. அந்த பிழைதான் குழந்தைமையின் அழகு.

"தம்பி?..."

"நான் ஒண்டி தான் சார்!..."

அந்தக் குரலில் ஏக்கம் பளிச்சிட்டது. குழந்தை எப்போதும் பிறிதொரு குழந்தையைத் தான் தேடும் போல.

"எங்கூட எங்க ஆத்தா இருக்கு சார்!"

முகம் முழுவதும் பூத்துக் குலுங்கினாள். சொல்லும் போதே அவ்வளவு ஆனந்தம். உண்மையில் குடும்பத்தில் இருக்கும் முதியவர்களை எப்போதும் கொண்டாடுபவர்களாகக் குழந்தைகள் இருக்கின்றனர்.

"ஆத்தாகிட்ட எப்போதும் பேசுவில்ல?"

வயதானவர்களைப் புறக்கணிக்கும் நோய் கிராமப்புறங்களையும் விட்டு வைக்கவில்லை. 'இவர்கள் இனி இங்கு ஆவதற்கில்லை' என்று உணரும் தருணம் முதல் அவர்கள் குடும்பத்தில் மட்டுமல்ல எல்லோருக்குமான குடிசையிலிருந்தும் புறந்தள்ளி வைக்கப்படும் அவலம் தொடரத்தான் செய்கிறது...

"எங்க ஆத்தா தான் எனக்குக் கதை சொல்லும்!"

பட்டென்று வெடித்துச் சிரித்தவாறே சொன்னாள். கள்ளம் கபடமற்ற முழியை உருட்டிக் கொண்டும் நாணி கோணிக் கொண்டும்.

"எங்க அப்பா பேசாது!"

அவளாகவே முந்திக் கொண்டு சொன்னாள். என்னை ஆச்சர்யப்படுத்தும் விதமாக. அல்லது அதைத் தெரியப்படுத்தும் முகமாக. எனக்கு அவளது தந்தை குறித்து ஓரளவிற்கு தான் தெரியும். முழுதாக நான் அவரைப் பார்த்தது கூட இல்லை. எப்போதேனும் அழைக்க வரும் நேரங்களில் பள்ளிச் சுற்றுச்சுவருக்கு வெளியில் மறைவில் இருந்தபடி இருப்பதை மகள் மட்டும் சரியாக மோப்பம் பிடித்து வீட்டுக்கு ஓட அனுமதி கேட்பதை பலமுறை பார்த்திருக்கிறேன். ஏனோ எனக்கும் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தோன்றவில்லை.

"நீ பேசுவில்ல?"

ம்ம்... என்பதுபோல தம் இரட்டை சடை ஆட தலையை வேகவேகமாக ஆட்டினாள். சின்ன புருவம் அகல விரிந்து கிடந்தது. அதன் ஓரத்தில் ஆயுத எழுத்து வடிவில் வைக்கப்பட்ட கருமையான திருசுடி பொட்டு பார்க்க அழகாய் இருந்தது.

"ஆமா நீ என்ன பேசுவ?"

வியப்பு தாளாமல் கேட்டு விட்டேன். இதுபோன்ற மனிதர்களையும் குழந்தைகளையும் என் ஆசிரியர் பணிக்காலத்தில் நான் இதுவரை எதிர் கொண்டது கிடையாது. இவர்களிடம் எவ்வாறு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பது கூட எனக்குத் தெரியாது.

"நான் அதுக்கிட்ட பேசுவன் சார். ஆனா அது எல்லாத்துக்கும் கை அசைச்சுக் காட்டி சரியாக பதில் சொல்லிடும்!"

முத்துத் தெறித்தாற்போல் அவ்வளவு தெளிவான பேச்சு என்னை விழுங்கியே விட்டது. ஆச்சர்யத்திலும் ஆனந்தத்திலும் என்னால் சரிவர பேச முடியவில்லை. கண்கொட்டாமல் அந்த பிஞ்சு தெய்வத்தின் மழலை மொழியைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்று இருந்தது.

இனம்புரியாத ஒருவித கழிவிரக்கம் என்னை ஆட்கொண்டு விட்டது. இதயத்தில் ஈரம் கசியத் தொடங்கியது.

"ஒனக்கு அது எல்லாம் புரியுமா?!"

அப்பாவியாக வினா எழுப்பினேன். அந்த உலகம் இதுவரை என் வாழ்நாளில் நான் அறிந்திராத ஒன்று. இதுகுறித்த அறிவு என்பது எனக்குத் துளியும் தெரியாது. இந்த அனுபவம் உங்களில் பலருக்கும் இருக்கக்கூடும்.

"ஓ!...நல்லா புரியுமே!"
"தெனமும் பேசுவியா?"

"ஆமா!... பள்ளிக்கொடம் வுட்டதும் எங்கப்பா கிட்ட நான் தெனமும் கதை பேசுவேன்." அந்த அழுத்தம் திருத்தமான பேச்சு என்னை பலவாறு யோசிக்க வைத்தது. நம்மோடு சுவாசம் போல் ஒன்றித்து விட்டது ஆன்ட்ராய்டு உலகம். ஆளாளுக்கு ஒரு தொடுபேசி. தீவிர நுகர்வு மற்றும் துலாவுதல் காரணமாகக் குடும்பங்களில் இயல்பாக நிகழும் பலதரப்பட்ட உரையாடல்கள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக மௌனிக்கத் தொடங்கிவிட்டது. இதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி இருக்கிறது. ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசி பல நாள்கள் ஆகின்றது. ஒரே அறைக்குள் இருந்த போதிலும் நீ வேறு நான் வேறாக உண்மை முகங்களை ஒளித்து வைத்துக்கொண்டு வாழப் பழகி வருகிறோம். மன்னிப்பைக் கூட நாம் குறுஞ்செய்தி மூலமாகவே மற்றவருக்குத் தெரியப்படுத்த விழைவது நன்றா தீதா விளங்கவில்லை.

எம் பள்ளி முதலாம் வகுப்பு குட்டி மனுசி யோசினியின் இந்த தரமான செய்கை என்னை மிகவும் ஆழ யோசிக்க வைத்துவிட்டது. உங்களை?...

வகுப்பு தொடரும்...
முனைவர் மணி கணேசன்.

---

# தனிமை

வேலைமுடிந்து
அனுதினமும் வீடு திரும்புமென்னிடம்
கேட்பதற்கென எத்தனையோ
கேள்விகள் வைத்திருக்கிறான் மகன்,
என்ன வேலை பார்க்குறிங்க
எங்க வேலை பார்க்குறிங்க,
உங்க அலுவலகத்தில்
எத்தனை பேர் வேலை பாக்குறாங்க,
எவ்வளவு சம்பளம் வாங்குறிங்க
வேலை சுலபமாகயிருக்குமா
கடினமாயிருக்குமா,
என நீண்டு கொண்டேயிருக்கிறது
மகனின் கேள்வி,
அவன் ஊருக்குப் போன நாளொன்றில்
கேள்வி கேட்க யாருமில்லாத போது
கேள்வியாய் நிற்கிறது...
என் தனிமை!

—

மு. முபாரக்.
திருச்சி.



# கவிதைகள்

## நன்றாகவே

காதும் கேட்கிறது
கைப்பேசியும் இருக்கிறது
யாரிடமிருந்தும்
அழைப்புகள் தான்
வருவதில்லை
அந்த
"அம்மா"வுக்கு!

—

## சிரிப்பு!

நேற்று என்னிடம்
இன்று அவனிடம்
நாளை யாரிடமோ
ரூபாய் நோட்டில்
காந்தி!

—

## எதுவும்

சொல்வதற்கில்லை
சொல் பேச்சு
கேட்காத மனிதர்களிடம்
தலையாட்டி
கேட்பதை தவிர!

—

## ஒரு மாறுபட்ட

இரு இலை (தா)வரம்!
ஆக்சிசனை
உள்ளிழுத்து
கார்பன் டை ஆக்சைடை
வெளியிடும்
நுரையீரல்!

—

## மனைவி

எது வேண்டுமானாலும்
செய்யலாம்
கணவன் அனுமதியுடன்! கூண்டிற்குள்
"சுதந்திரம்"!

—

## மனிதர்களிடம்

கை நீட்டினேன்
இல்லையென்று
சொன்னார்கள்
கடவுளிடம்
கை நீட்டினேன்
பதிலில்லை
பலன் இருந்தது!

—

## உனக்கு மட்டும் எப்படி

எப்பொழுதும்
கருப்பு நிறத்தில்
மாராப்பு!
அட
உன் கூந்தல்!

—

## சேர்ந்தே வருகிறார்கள்

சேர்ந்தே போகிறார்கள்
கணவன் மனைவி
தங்களின்
விவாகரத்துக்காக!

—

## பாட்டி

பாட்டிக்கு பின்
அம்மா
அம்மாவிற்கு பின்
மகள்
தலையில் பேன்!

—

## மனிதர்கள்

மிகவும்
ஆபத்தானவர்கள்
இப்படிக்கு
"மிருகங்கள்"!

— மகிழை. சிவகார்த்தி



---

# வாழ்வியல் உண்மைகள்

1. நீங்கள் தவிர்க்கப்படுவது ஊர்சிதமானால், எப்பேர்ப்பட்ட இடத்தையும் தவிர்த்து விடுங்கள்.

2. பிறக்கும் நொடியும், இறக்கும் நொடியும் யாரையும் எதிர்பார்ப்பதாக தெரியவில்லை.

3. விசையோடு சேர்ந்த பலத்தக் காற்றானது, ஒன்றன் திசையையே மாற்றி விடுவது போல, ஒருவரின் சுயமானது; அவரின் அவருக்கான நயத்தையே மாற்றுகிறது என்பதே உண்மை.

4. பக்குவம் என்பது யாதெனில்? பட்டதெல்லாம் பட்டறிவென்று நகர்வதே... பக்குவம் தான் நமது வாழ்வை மேலோங்கச் செய்யும் என்பதே உண்மை.

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.



# எதிர்நீச்சல்

அச்சமில்லை மனமே
அணையாதே தீபமே
அன்பின் வலிமை கொண்டு
ஆலகால விசமுடை மனமே

*******

அச்சமின்றி முயன்றிடு
ஆக்ரோஷமாக உழைத்திடு
மிச்சமின்றி அடைவாய் உலகில்
உச்சபட்ச இன்பமே

********

தோல்வி பயம் களைந்து
துணிந்தவனுக்குத் துக்கமில்லை
வெற்றியின் கைதொடும் வரை
இரு விழிகளில் தூக்கமில்லை

*********

அடிமை அல்ல நீ
ஆழியாய் எழுந்திடு மனமே
கோழைத்தனம் ஒழித்து
கோபுரமாய் உயர்ந்திடு மனிதமே

********

குஞ்சுப் பறவை ஒருபோதும்
கூட்டில் அடைந்து கிடப்பதில்லை
விழுந்தாலும் எழுந்து பறக்கும்
விந்தை அறிந்திடு மனிதா நீ

******

தோல்விகள் தோற்கட்டும்
துல்லியமாய்த் திட்டமிடு
தூண்டும் துணிச்சலோடு
தொடர்ந்திடு எதிர்நீச்சல்

---------------

## குறுங்கவிதைகள்

*1*

குண்டுவெடிப்பு
இறுக அணைத்துக் கொள்ளும் சிறுமி
புத்தகங்களை நெஞ்சோடு

*2*

விரிந்த பூ
விழப்பார்க்கும்
பனித்துளிகள்

*3*

மஞ்சள் மலர்
பார்வையில் படுகிறது
மங்கையின் கூந்தல்

*4*

முடிச்சிட்டது யாரோ?
மரணம்வரை இணைந்தே இருக்கும்
முளைத்த இருமரங்கள்

*5*

ஆவேச நடனம்
நொடிக்கு நொடி
பயணப்பாதையில் தண்ணீர்க்குழிகள்

**6**
மனிதரைக் காட்டிலும்
மிகவும் நம்பகமானது
பணம் எடுக்கும் கருவி

**7**
நெருக்கமான குடியிருப்பு
இடையே தேடிக்கொண்டிருக்கும்
ஓடுபாதையை மழைத்துளிகள்

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

---

# எங்கே மகிழ்ச்சி...!

எங்கே மகிழ்ச்சி என்று தேடி அலைபவர்கள் எல்லோரும், மகிழ்ச்சி எங்கும் இல்லை, அது அவர்கள் மனதில் இருக்கிறது என்பதனை மறந்துவிட்டார்கள்.

"மகிழ்ச்சியை வாங்க ஒருபோதும் முயலாதீர்கள், அதற்க்கு மாறாக உங்களை மகிழ்ச்சியிடம் விற்றுவிடுங்கள் அது சுலபம்" என்றார் ஒரு அறிஞர்.

எது கிடைத்தால் மகிழ்ச்சி என்பதில் இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் வேறுபடுகின்றனர். உலகத்தில் பணக்காரரர் பட்டியலில் முதலில் இருப்பவர் அடுத்த ஆண்டும் முதல் இடத்தில் இருந்தால் அது அவருக்கு மகிழ்ச்சி. தினம்தோறும் கூலி வேலை செய்து கிடைக்கும் சொற்ப தொகையில் சாப்பிட்டுவிட்டால் அது அவனுக்கு மகிழ்ச்சி.



எனவே மகிழ்ச்சி பணத்திலும், சொத்திலும் இல்லை ,அது மாறாக மனித மனதில் உள்ளது.

ஒரு தேசிய பயிற்சியாளராக,உளவி யல் ஆலோசகராக நிறைய இடங்களில் இதனை நான் ஆய்வு செய்துள்ளேன். கிடைத்த விடை மகிழ்ச்சி ஒவ்வொருவர் மனதில் மட்டுமே உள்ளது.

சென்னையில் நடைபாதையில் குடும்பம் நடத்தும் பலரிரிடம் ஆய்வுக்காக "உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியா?" என்று கேட்ட போது பெரும்பாலனவர்கள் சொன்ன பதில் "மகிழ்ச்சியே. இந்த நடைபாதையில் வாசித்தோம், திருமணம் செய்து கொண்டோம், இரண்டு குழந்தைகளை பெற்றுக்கொண்டோம், நாங்கள் எதுவும் சேர்த்து வைக்கவில்லை, ஒவ்வொரு விடியலிலும் நம்பிக்கையோடு நாங்கள்

உழைக்கிறோம், பட்டினியின்றி அனைவரும் சாப்பிடுகிறோம் அதுவே மகிழ்ச்சியாக உள்ளது." இந்த உண்மையை புரிந்து கொண்டால் உலகத்தை வெறுக்கும் நிலை யாருக்கும் வராது.

இந்த உலகில் யாரும் எதனையும் இறக்கும் போது கொண்டு செல்வதில்லை, இன்னொரு முறை யாருக்கும் வாழ்க்கையும் இல்லை, அதனால் கிடைத்த வாழ்கையை மகிழ்ச்சியாக வாழ்பவனே புத்திசாலி.

ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம், மகிழ்ச்சி எங்கே உள்ளது எனக் கேட்டார். அதற்கு அவன் "திரைப்படம், கடற்கரை, பூங்கா"என கூறினான். சரி கேள்வியை மாற்றிக் கேட்கிறேன். அழகு எங்கே இருக்கிறது என கேட்டார். இதற்கும் பச்சைப் செடிகள், அவற்றில் பூத்திருக்கும் வண்ணப்பூக்கள், பூக்களில் அமரும் வண்ணத்துப் பூச்சிகள், வானவில், அழகான அருவி என கூறினான்.

ஆசிரியர் சொன்னார் "நீ சொல்வது எல்லாம் சரிதான். ஆனால் அதை ரசிக்க நல்ல மனம் வேண்டும். நீ சொன்ன எல்லாமும் எல்லோருக்கும் மகிழ்ச்சி தராது, அது அவரவர் மன நிலை பொருத்தது "அதாவது மனம் எதிர்பார்ப்பு இன்றி இருந்தால்தான் எதையும் ரசிக்க முடியும் என்றார் ஆசிரியர்.

ஆமாம் இது கிடைத்தால் தான் மகிழ்ச்சி என்று நினைத்தால்,அது ஒருபோதும் கிடைக்காது. எது கிடைத்ததோ அது மகிழ்ச்சி என்று ஏற்றுக்கொண்டால் அடுத்த வெற்றி உங்களுக்குதான்.

—

முனைவர் சா. சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
உளவியல் ஆலோசகர்.

காசுக்கு மாற்றாக
கவிதையை
வாங்கி கொள்வீர்களா?

கவிதைக்கு மாற்றாக
காசு கொடுப்பீர்கள்

வேண்டாம்
என் கவிதைகள்
விற்பனைக்கு அல்ல..

—

அ. ஈடித் ரேனா,
கிராம நிர்வாக அலுவலர்,
புதுக்கோட்டை - 622003



# இவைகளும்...

தனக்கு தெரியாவிட்டாலும்
அறிந்தவர் மூலம்
குழப்பத்துக்கு தீர்வு சொல்வது...

சோகத்தையும்
இழப்பையும்
உணர்வாய்
உதட்டு மொழியாக்கையில்
குறுக்கீடாமால்
உள் வாங்கி
தோள் தட்டுவது...

கேட்கும் மனநிலை இல்லை
என்கிற போது
வார்த்தைகளை விழுங்கி
அமைதி காப்பது...

நம்பிக்கையாய்
கோரப்படுகையில்
முடியாது எனில்
'பார்க்கலாம்'
என இழுத்துக்கொண்டே
போகாமால்
உண்மை சொல்வது...

இதுவா அதுவாக்கு
யோசனை கேட்கையில்
அனுபவம் கொண்டு
தெளிவு கொடுப்பது

இவைகளும்
உதவி தான்
பொருளாதாரம் மட்டுமல்ல...

# அது என்னவோ...

பள்ளி நாட்களில்
பள்ளி சென்ற பிறகு
பிராத்தனை கூடத்தில்
ஏதோ காரணத்துக்காய்
எதிர்பாரா விடுமுறை
அறிவிக்கப்பட
குதூலித்த நாள்

வரப்போகிற
விசேஷ நாட்களை
எண்ணி
பேசிப்பேசியே
சகாக்களோடு
சந்தோஷ பொழுதுகள்

பள்ளி முடித்ததும்
விளையாட்டுக்காய்
ஆற்றங்கரை நோக்கி
ஓடிய காலங்கள்

உறவுத்திருமணத்தில்
சக வயது உறவுகளோடு
மாதக்கணக்கில் நடந்த
நிகழ்வுகளை
மணிக்கணக்கில்
உறக்க இரவுகளை
தொலைத்து
பகிர்ந்த நேரங்கள்

கல்லூரி காலங்களில்
பத்து நாள் ஊர் திருவிழாவில்
நண்பர்களோடு
முழு இரவும்
பார்ப்பவர் தொடங்கி

சமுகம் வரை
விமர்சனமும்
அரட்டையுமாய்
கழித்த நாட்கள்

கல்லூரியில்
படிப்பில்
முதல்வனாய்
இருந்ததற்கு
ஆசிரியர்களிடத்தும்
வகுப்பு தோழர்களிடத்தும்
கிடைத்த பாராட்டுக்கள்

குறைந்த ஊதியம்
தற்காலிக பணி
என்ற போதிலும்
முதலில் பணிக்கு
சென்ற நாள்

மிக நீண்ட
போராட்டத்திற்குப்பின்
நிரந்தரப்பணி
கிடைத்த நாள்

புது வேலையில்
நிருபிக்க வேண்டிய
கட்டாயத்திலும்
அதற்காக கொடுத்த
உழைப்பாலும்
கிடைத்த
செய்பணிக்கான பாராட்டு

அது என்னவோ
இத்தனை நினைவுகளும்

நிகழ்கால
வருத்தத்துக்கும்
சோகத்துக்கும்
எதிர்கால
பயத்துக்கும்
இடையில்
ஏக்கத்தை இரட்டிப்பாக்க

அந்தந்த வயதுக்கும்
வாழ்க்கைக்கும்
வெவ்வேறான
மகிழ்ச்சி
என புத்தியின்
வார்த்தையை
புறந்தள்ளி

## ஒருவரில் இருவர்

தனித்திருத்தல்
என்பது ஒருவரா

யார் சொன்னது

இது வேண்டும்
அது வேண்டாம்

இது பிடிக்கும்
அது பிடிக்காது

இன்று இதில் சந்தோஷம்

நாளைக்கு இது நடந்தால்
அது மகிழ்ச்சி

நாளைக்கு
இது நடந்து விடுமோ

என்ற பயம்

இப்படிக்கு
மனதின் குரலும்

நீ சொன்னதையும்
உனக்கு பிடித்ததையும்
என்னால் செயலாற்ற முடியுமா
சாத்தியமானவை தானா

நீ வேண்டாம் என்பவற்றையும்
பிடிக்கவில்லை
என்பதையும்
என்னால் தவிர்க்க முடியுமா

என கேள்வியின்
நாயகனாய்
புத்தியுமாய்

இரண்டு பேர்

# எங்கே போயின?..

மகிழ்ச்சியில்
'ஆர்ப்பாட்டமின்மை'

பதட்ட சூழ்நிலையில்
'நிதானம்'

தோல்வியில்
'மீண்டும் முயற்சி'

இழப்பில்
திரும்ப பெற 'வைராக்கியம்'

சோகத்தில்
'தேற்றிக்கொள்ளல்'

என
படித்தது
கேட்டது
பார்த்தது
பகிர்ந்தது

அத்தனையும்
காணாமால்
போனது

அந்த கணத்தில்

மனது சொல்லியதை
புத்தி கேட்டதால்...

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
தொடர்பு இலக்கம்: 9994920236



**அட்டைப்பட உதவி:**
**மா. நிரல்யா, சிங்கப்பூர்.**
**(செயற்கை நுண்ணறிவு முறையில் வரைந்தவர்)**

# சிறுவயது என்னிடம் என் சின்ன உரையாடல்

நெஞ்சின் கடைக்கோடியில் என்னில்
கலந்திருக்குமென் கண்ணா
கொஞ்சம் பேசி உன்னைக் காண
வந்தேனே வா!
வளர்ந்தேனே அன்றி உன்னிடம் சிலவரம்
வேண்டிவந்தேனே!
தளர்ந்தேப்போன என் வாழ்க்கையை
மீட்கும்படியாக வந்தேனே!
கல்லம் கபடமில்லா வெள்ளை
மனதுடன் சிரிப்பும் தா!!
எப்படையும் வெல்லும் பயமறியா
சாரமும் தா!!

வாழ்க்கைப் புத்தகத்தின் பாதி பகுதியை
படித்தேரிய நான்
என் அனுபவத்தை உன்னிடம்
அரங்கேற்ற விழைந்தேனே!
திறமையும் நேர்மையும் அரும்
பெருமையைத் தருவன!
உழைப்பும் உத்வேகமும் நல் உயர்வைத்
தருவன!
சோம்பலைச் சூறையாடி தீயன
யாவையும் தூரப்போடு!!
ஒவ்வொரு நாளையும் ஒட்டாமல்
நினைந்து வாழு!!

நீ கனவாக நினைத்த பெரும்
வாழ்க்கையை
உண்மையாக தற்போது நான்
வாழவில்லை, எனினும்
நித்தமும் உழைத்து உள்நிறைவோடு
இனிவாழ்வோம் நாம்!!!
என்றுமே நீ நீயாக இரு, நாம் நாமாக
நிலைப்பதற்கே!!!

—

இரா. ரம்யபாரதி,
புதுச்சேரி.

---

# பொன்நினைவுகள்

தீவிரப் புயலுடன் கூடி
அடர்ந்து பொழியும்
உன் கனிவற்ற
உதாசீன பெருமழை
ஓயாமல் தீயை வாரி வீசினும்
கரையைப் பிரியும் மனமின்றி
யாசித்துநிற்கிறேன்
கைகளில் நிரம்புகிறது
வாடைக்காற்றின்
குளிர்மிகுந்த ஒட்டடை
துயரில் கருகிய விழிகளோடு
தனித்தலையும் சாலைகள்
நரகத்தின் பேரிருளை
வாழ்த்துடன் பரிசளிக்க
வாழ்தலை நீட்டிக்கிறது
என்னிடம் மிச்சமுள்ள
வரமான உன் பொன்நினைவுகள்

## நீயென்னும் பூரணம்

கண்ணுக்குள் காந்தம் வைத்து
கன்னத்தில் மச்சம் வைத்து
இருட்டான கூந்தல் வைத்து
இணைநாகப் பின்னல் வைத்து

உதடெல்லாம் பூக்கள் வைத்து
ஊடுருவும் வெட்கம் வைத்து
நெற்றியிலே நிலவு வைத்து
நெய்விளக்காய் பார்வை வைத்து

பட்டாக்கத்தி புருவம் வைத்து
பட்டாம்பூச்சி இமைகள் வைத்து
தொட்டாசிணுங்கி நாணம் வைத்து
தோகைமயில் சாயல் வைத்து

அஞ்சுகமாய் கொஞ்சல் வைத்து
அனிச்சமலர் தீண்டல் வைத்து
செங்காந்தள் விரல்கள் வைத்து
செல்வாக்காய் நெஞ்சம் வைத்து

செவ்வாழை கால்கள் வைத்து
செந்தாழை வாசம் வைத்து
செங்கரும்பின் கைகள் வைத்து
செந்தமிழின் மொழியை வைத்து

செம்போத்து நடையழகில்
செக்கர்வான நிறயெடுப்பில்
காதோரம் ஜிமிக்கி ஆட
கஞ்சத்தன இடையும் வாட

தாமரை பாதம் வைத்து
தங்கசிலை வீதிவரும்
தேவதை பேரழகே
தெய்வீகத் தேரழகே

காற்றெல்லாம் இதமாக
கதிரெல்லாம் ஒளிகூட
பூவெல்லாம் மனமேங்க
பூம்பாவாய் உருவானாள்

குவலயமே கொண்டாட
குயிலெல்லாம் பண்பாட
திருவிழா குதுகலமாய்
திருமகளாய் இதயம் நின்றாள்

## தனல் மிகுந்த கரை

நானற்ற இதயமுடன்
இனிதலர்ந்து கமழ்கிறாய் நீ
என் பூரண விலகலைக்
செங்கால் நாரையென
விரும்பிக் காத்திருந்தாய்

இரவின் யாமத்தை
மைநிரம்பிய விழிகளால்
நெஞ்சம் நேர் புதியரோடு
இமைக்காமல் களவாடுகிறாய்

உன்னில் கிறங்கிய
கடுந்துயர் நெஞ்சுடன்
சுடரற்று மங்கிக் கிடக்கிறேன்
வானெங்கும் நிரம்பி
மின்னல் இடியுடன்
காலிறங்கிப் பொழிகிறது
பருவ மழை

மீன்களின் கனவில்

வற்றிய கடலுடன்
தனல் மிகுந்த கரை.

## பழைய மகிழ்வு

நானற்ற இரவுகளை
எளிதாய் கடந்து
மெத்தென்ற படுக்கையில்
இலயித்து உறங்க
கனவைக்கவ்வி
உயிருள் தொடரும்
உன் பழைய நெகிழ்வினை
விட்டிட வழியில்லை
கருகித் தீய்கிறேன்
உருகி மாய்கிறேன்
கழுமர உச்சியில்
இதயம் கிழிந்து சாகையில்
நிச்சயம் ஒளிர்ந்திடும்
உன் ஆம்பல் நிறத்து
கூம்பிய வெட்கம்

## ஆன்ம விருட்சம்

வண்ணக் கோலங்களைச்
சுற்றியொளிரும்
கார்த்திகை அகல்விளக்குகளாய்
எப்பொழுதும் நீயென்முன்
ஒளிவீசி ஜொலிக்கிறாய்
விழிகளில் மின்னலையும்
இதழ்களில் கொஞ்சலையும் ஏற்றி
நீப்பொழியும் பேரழகில்
துள்ளிக்குதித்து நனைகிறேன்
கால்களின் வேர்களில்
நேயத்தின் அளப்பரை
விதவிதமாய் நிறைய
ஆகாயத்தில் மிதக்கிறது
மலர் காய் கனிகளோடு
என் ஆன்மவிருட்சம்.

## பிரிவின் நாகங்கள்

வளரும் துயரைத் துணைக்கொண்டு
கனிவற்ற நினைவுகளால்
ஆத்மாவைச் சபித்திருக்கிறேன்
கரையை மோதும் அலைகளில்
கால்கள் நனையவில்லை
கண்ணீரின் சருகுகள் உதிர்த்து
வெற்றென வாழ்கிறேன்
நீயிருந்து இரட்சத்த நாட்களைப்
பிரிவின் நாகங்கள்
ஆலகாலம் பாய்ச்சி
இருதயம் நடுங்கச்செய்கிறது
எதிர்பாராமல் சந்தித்த
உன் தோழியுரைக்கிறாள்
குடும்ப சகிதமாய்
நீ நலமுடன் வாழ்வதாய்!

—

பொன். தெய்வா,
ஐவேலி.



# பூமி சாவி

புறமற்ற போது
இருள் வெளிச்சம்
இருக்கும் எல்லாமும்
இருளின் அகவல்
மிதந்தலையும் மிச்சத்தில்தான்
வானுயரம்
வேண்டுதலின் வழியே
மேகமாகிறது நிகழ்
மென்னொளி வீசத்தான்
தூரங்களின் விருப்பம்
நம்புதற்கிணங்க நடுவே
மலை நின்று பார்க்கிறது
எதிரே வானம் சூழ நீள்கடல்
பிரபஞ்ச கற்பனை
சரிதான் என சிரிக்கும்
நட்சத்திர பூரிப்புகளில்
பெருவாழ்வு கருந்துளைக்கு
எதுவோ போதாதென பற்கள் காட்டி
ஊர்கிறது தொடுவானம்
கரிசக்காட்டு கரையோரம்
ஆடு மேய்க்கும் சிறுவனின்
கையிலிருக்கிறது
பூமி சாவி......!

## என் வனமெல்லாம் நின் காந்தள்

குரல் வழியே எனை நிரப்பும்
சிறு வெயில் நீ
நின் காதல் எண்ணி தவித்திருக்கும்
பெரும் மழை நான்

உள்ளம் பூத்த நெல்மணிக்கு
உக்கிர தூது இந்த நெல்லிக்கனி
அன்பை கோர்க்கும் மின்மினிக்கு
ஆதி ஆப்பிள் இந்த பிள்ளைமுனி

உன் உறவில் தானே இவன் பூந்தோட்டம்
உன் சிறகில் தானே இவன் தேரோட்டம்
கன்னம் பூத்த கனவே
நீ கண்ணன் இவனின் அவளே

இதயம் பேசும் இசையின் வடிவம்
உனை இசைத்து பேசும் எந்தன் கடிதம்
ஊதா நிறம் உன்னை வரையும்
அதில் சிறகு பூட்டி என் எண்ணம்
கரையும்

என்னை நிகழ்த்தும் சிருங்காரம் நீ
புன்னை வனத்து புகழாரம் நீ
நீ இன்றி நான் ஏது பெண்ணே
என் வனமெல்லாம் நின் காந்தள்
கண்ணே

## அந்தி மாலை வெளிச்சம்

இறந்து விட்ட அக்காவால்
இனி எழுந்து வரத்தான் முடியாது
எழுத முடியாமல் எல்லாம் இல்லை
காற்றில் அசையும்
இலைகளெல்லாம் என்னவாம்
இலையில் சுருளும்
வெளியெல்லாம் எதுவாம்
இன்னும் உற்று நோக்க
அக்காவின் அச்சு அசல் தான்
அந்தி மாலை வெளிச்சம்
இறந்து விடல்
ஒரு சம்பராதயம் தான்
கேட் சாத்தி விட்டால்
ஆலயத்தில் ஜீஸஸ்
இல்லையென்றா அர்த்தம்....!

## உடல் புகு

இறுகியதெல்லாம் தளர்
இசை உண்டு காண்
இணுங்கிய கன்னத்தில்
மீசை குத்த அனுமதி
பூவிதழ் மெத்தையில்
புகுந்து கொள்ள வழி விடு
மனம் முழுதும் மலர
வேறு வழியில்லை
மல்லாக்க குப்புற என
உனை மலர்த்திதான் பாரேன்
மெய்ப்பொருள் திறந்து
மார்பணிந்து விடு
பூனை கால்களில்
கொஞ்ச நேரம் புலி ஆகு
சுடரும் தீபம் அசைந்தாட
குறுகுறுவென நிமிரும் பெண்மை
சிக்கல் இல்லாத பெருவாழ்வுக்கு
துக்கம் இல்லாமல் துணி அகற்று
ஆழமான பிரார்த்தனைக்கு
அகல விரி
உடல் பாரம் இறக்கி விட
இன்னோர் உடல் புகு

## நான் யார் தெரியுமா

நான் பின்னோக்கி நடக்கிறேன்
என்னால் ஒரு கண்ணால்
மறு கண்ணை பார்க்க முடிகிறது
பாதி முதுகு வயிற்றில் இருக்கிறது
ஆண் பெண் விதி இல்லை
ஆனாலும் அழகு உண்டு
பாதங்களில் இரு சிறகுண்டு
தலைக்குள்ளிருந்தும்
இரு சிறகு எனக்குண்டு
காது பேச வாய் கேட்கிறது
கடவுளென பத்து கைகள் எனக்கு
பத்திலும் வழிய வழிய
கோன் ஐஸ்க்ரீம்கள்
வண்ணக் குழைவு என் முழுக்க
*Mr.Bean* மூக்கு என் முகத்தில் சிரிக்க
குழந்தை வரைந்த எனக்கு
சற்று நேரத்தில் பெயர் சூட்டப்படும்
அப்பாவின் ஓவியம் என்று....!

— கவிஜி



**மா. நிரல்யா,**
**சிங்கப்பூர்.**

# குறுங்கவிதைகள்

கான்கிரீட் தளத்தில்,
எட்டிப் பார்க்கிறது,
நெருஞ்சி பூ.

**

கருவூலம் கரைகிறது,
நேற்று பெய்த மழையில்,
தார்சாலை.

***

அமைதியை திரும்ப,
தீபாவளியன்று காத்திருந்தது ,
பறவைகளும் விலங்குகளும்.

****

திருமண விழா,
குடும்பத்தோடு வருகை தந்தார்கள்,
மழைக்கால ஈசல்கள்.

*****

புற்கள் முளைத்த பிறகு,
கொஞ்சம் இளைப்பாறுகிறது,
ஒற்றையடிப்பாதை.

— அ. செல்வராஜ்,
2/172, கண்ணமநாயக்கணூர்,
உடுமலைப்பேட்டை தாலுகா,
திருப்பூர் மாவட்டம்.

---

# துளிப்பாக்கள்

சூரியன் அரைத்த மஞ்சளை
பூசிக் கொண்டது
நிலா

சூரியனின் நிழலை முழுமையாய்
தாங்குகிறது நிலா

ஏறுகொடிக்கு முன்
ஏறி விடுகிறது
நிழல்

கடற்கரையில் நடக்க
ஆசீர்வதிக்கின்றன
அலைகள்



அதிகாலை உறக்கம்
நீட்டிக்கச்செய்கிறது
கன மழை

விரிந்த வானத்தின் கீழ் சூரியனைச்
சுமக்கும்
குடை

எல்லோருக்கும்
ஒரே கனவு
வீடு

—
பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம் | 6380704001

# ஆண் பாவம்

இந்த நாள் மிக முக்கியமான நாள்.

இந்த நாள் எப்போது வரும் என்று எப்போதும் நான் எதிர் பார்ப்பது தான். எதிர் பார்ப்புகள் இயல்பாகி அதுவும் ஒரு தூரத்து ஆசை என்றளவில் ஆகி விட்டது. ஆனாலும் என்றாவது பூக்கும் நிஷாகந்தி பூவை போல இந்த நாள் என்னை உயரத்தில் இருந்து கீழே சர சரவென இழுத்து வந்து நிறுத்தும். அல்லது பர பரவென மேலே தூக்கி சென்று எதையாவது நிகழ்த்தும்.

எல்லார் வாழ்விலும் வரும் அதே காதல் தானா இது என்று நான் யோசித்தது உண்டு. என்னை விட பத்து வயது சின்னவள் மீது காதல் வந்தது பெரிதாக தெரியவில்லை. தன்னை விட பத்து வயது அதிகம் உள்ள என் மீது அவளுக்கு வந்த காதல் பெரிதாக தான் தெரிகிறது.

எங்கிருந்தோ வந்தாள் போல... ஒரு நாள் ஒரு செய்தி. எனக்கு இன்னும் மூணு மாசத்துல கல்யாணம். ஆனா எனக்கு இப்ப உன் மேல காதல். எனக்கு குழப்பமே இல்ல. காதலுக்காக வீட்டை விட்டு ஓடி வர சூழல் எனக்கு இல்ல. வீட்டுக்காக வந்த காதலை மறைக்க வேண்டிய தேவையும் எனக்கு இல்ல. எனக்கு தெரிய வேண்டியது எல்லாம் உனக்கு என் மீது காதல் இருக்கிறதா.

நான் ஆடி போய் விட்டேன். முப்பது வயதுக்காரன் நான். மூச்சு முட்டுது. இருபது வயசுக்காரி அவ. பேச்ச பாருங்க. ஆசை யாரை விட்டது. இந்த மாதிரி ஒரு பேரழகியை யார் தான் வேண்டாம் என்பார்கள். அதுவும் நான் காதலே கதி என்று கிடப்பவன். காதலின் வழியே கடவுளாகும் முயற்சியும் எனக்குண்டு.

அதென்ன மூணு மாச காதல். உள்ளே ஒரு குறுகுறுப்பு. இல்ல... போக போக அவ நம்ம கூடவே வந்துருவா என்று ஓர் உந்துதல். எத்தனை காதலை கடந்திருப்பேன். இந்த காதலையும் தான் உணர்ந்து விடுவோமே என்று முத்தமிட்ட எமோஜியை சத்தமில்லாமல் அனுப்பி இருந்தேன்.

காலையில் கனகாம்பரம் பூத்தது போல ஒரு குரல் செய்தி.

நான் இவ்ளோ சாஃப்ட்ல்லாம் இல்லப்பா. என்னவோ உன் கூட இருக்குறப்பல்லாம் ஒரு அமைதி வந்துருது. டேன்ஸ் கிளாஸ்க்கு ஆட வந்தவ... உன் டேபிள் ஃபேனாய் ஆகி விட்டேன் என்று சொல்லி நாக்கு கடித்திருந்தாள்.

பேசிக் கொண்டே இருப்போம். முப்பது வயது முதிர்ச்சிக்கு இந்த பேச்சு வெளியே சொல்ல முடியாது தான். ஆனாலும் சொல்லும் போது இருக்கும் சின்ன சின்ன ராட்டினம் சுற்றாவிட்டாலும் அழகு தான்... இல்லையா.

இன்னைக்கு எங்க ஊர்ல மழை. எங்க காட்டுக்கு நல்ல தீனி. அப்பாவுக்கு சந்தோசம். அம்மா சும்மாவே சிரிக்குது. அப்புறம் சீனி... இன்னைக்கு நைட் எங்க அக்கா ஊர்ல இருந்து வர்றா. போன் பண்ண முடியாது. அதனால... இப்பவே வாங்கிக்கோ ஒரு டப்பா முத்தம்.... என்று இச் இச் இச் என்று அரைப்பக்கத்துக்கு அனுப்பி இருந்தாள்.

இப்படி  சிறுமிக்கும் சிலைக்கும் இடையே இருப்பவளை காதலிக்காமல் என்ன செய்ய. நாட்கள் நெருங்க நெருங்க நெருஞ்சி முட்கள் நெஞ்சினில். சீனி டப்பாவில் உப்பு சுவை.

மேட்சுக்கு மேச்சாக தான் ஆடை அணிவாள். கல்லூரி போகும் போது ஒரு ஹக் வந்திருக்கும். வீடு வந்த பிறகு ஒரு முத்தா வந்திருக்கும். இந்த மூன்று மாதங்களில் மூன்று முறை தான் சந்தித்திருப்போம். பார்த்ததும் கட்டிக்கொள்ள தோன்றும் படபடப்பு எனக்கு. கட்டிக்கொண்டால் பிரிய முடியாதே என்ற பரிதவிப்பு அவளுக்கு.

இது என்ன மாதிரி உறவுன்னே தெரியல சீனி. உன்ன மாதிரி ஒருத்தனதான எனக்கு மாப்பிளை பாத்துருக்கணும். அவர்.... அவர் மாதிரி ஒருத்தன பாத்திருக்கார். அவ அப்பா பத்தி சொல்றா.

ஆனா எங்கப்பா பாவம் தெரியுமா. காட்டுல மாடா உழைச்சு தான் என்னையும் அக்காவையும் படிக்க வெச்சார். அவர் பேச்சை மீறற தைரியம் எனக்கு இல்லப்பா என்று சொல்லி தோள் சாய்ந்தவளிடம் என்ன பேசுவது.

அணைத்துக் கொண்டேன். அணை உடைந்த அழுகையை அடக்க தெரிய வேண்டும் முப்பது வயதுக்கு.

விளையாட்டு போக்குலயா இந்த காதல் என்றால்... இல்லை. அவள் தெளிவாக இருக்கிறாள்.

காதலே இல்லாத வாழ்வென்று ஒரு நினைவு எனக்கு இருக்க வேண்டாம். அதுக்காக உன்ன யூஸ் பண்ணிக்கறேன்னு நினைக்காத சீனி. உண்மையா எனக்கு பசங்களயே பிடிக்காது. ஆனா உன்ன ஏன் பிடிச்சதுனே தெரியல. உன் டேன்ஸ் பிடிக்கும் தான். ஆனா காதலுக்கு அது மட்டுமா காரணம். ம்ஹும். என்னவோ உன்ன தான் பிடிக்குது. நான் என்ன செய்வேன் சொல்லேன் என்று சிணுங்குகிறவளை என்ன செய்வது. அரைக்கிறுக்கா இருந்தா போடின்னு சொல்லிடலாம். பேரன்பு சிறுக்கிய இறக்கி விட மனசில்லை. காதலின் தீவிரம் மூன்றே மாதத்தில் மூன்று முறை பிறந்து இறந்தது போல... அப்படி ஒரு திருப்தி.

கொஞ்சி தீர்ப்பாள். கெஞ்சி தீர்வாள். நான் கூட கேட்ருக்கேன். இவ்ளோ அழகா இருந்துகிட்டு என்ன போயி லவ் பண்ற...

இவ்ளோ அழகா இருக்கறதே உன்ன லவ் பண்ண தான் சீனி என்று சொல்லி சிரிப்பாள். வெகு தூரத்தில் இருந்து ரகசியம் பேசும் அவள் குரல். அவள்

இயல்பு பேச்சே நந்தி காதில் சொல்லும் நாண குரலில் தான். இவளை எப்படி பிரிவது. பிரியும் நாள் தெரிந்து இணைந்த காதலில் கைப்பிடிகள் இல்லை. படிக்கட்டுகள் மட்டுமே. எங்கு முடியுமோ அங்கு நிற்க வேண்டும் என்பது கட்டளை.

சீனி நான் போய்ட்டேன்னு சொல்லி என்ன விட்டு போன... நான் நல்லாவே இருக்க மாட்டேன். நான் எப்போ வந்தாலும் நீ எங்க நிக்கறயோ அங்கயே நிக்கணும்... நான் உன்ன யோசிச்சிட்டே தான் இருப்பேன் என்று கட்டிக்கொண்டு அழுததை வாழ்நாள் பூந்தொட்டியாக காத்து வருகிறேன்.

இடையே திடும்மென ஆறு மாதத்துக்கு பிறகு அலைபேசியில் அழகாய் பூத்தாள். கல்யாணம் முடிந்ததில் இருந்து பேசிக்கொண்டிருக்கும் இப்போது வரை எல்லாம் சொன்னாள். விடிய விடிய பேசினோம். விடிகையில் லவ் யூ சொல்லி தான் போனை வைத்தாள். மீண்டும் வருவேன். மிச்ச வாழ்வுக்கும் நீ வேண்டும் என்றாள்.

இதோ இன்று சந்திப்பதாக செய்தி அனுப்பி இருக்கிறாள். போக வேண்டும். இரண்டு வருட கதையைக் கேட்க வேண்டும். அப்படி என்ன அவ கிட்ட என்று கேட்போருக்கு எனக்கு சொல்ல ஒன்றும் இல்லை. அவள் கல்யாணத்தன்று நெஞ்சில் முகம் புதைத்தபடி அவள் அழுத அழுகையில் ஒரு துளி கூட பொய் இல்லை. பொய்யாகவே இருந்தாலும்... அவள் என் காதலி இல்லையா. அதை மெய்யென்றே நான் நம்புவேன்.

பார்த்த கணம் பருவம் முளைத்தது போல. சிறுபிள்ளை சித்திரம் கொஞ்சம் பூத்து இருந்தது. பேசினாள். இரண்டு வருட கதையை சொல்லி முடித்து... இன்னும் அங்க தான நிற்கிறாய் என்றாள். அங்கேயே தான்... நீ நட்ட இதய மரம் பூத்து குலுங்கி புதையல் ஆகிக் கொண்டிருக்கிறது என்ற போது குழந்தை சிரிப்பை கன்னக்குழியில் காட்டினாள். நான் அங்கேயே நிற்கிறேன் என்பது தான் அவளை எங்கோ இருக்க பலப்படுத்துகிறது.

பேசி முடித்து கிளம்பிய போது மீண்டும் அழுகை.. மீண்டும் ததும்பல். தெத்துப்பல் தெரிய அழுகையோடு மெல்ல சிரித்தவள்... இனி எப்போது வருவாளோ. ஆனால் நான் காத்திருக்க வேண்டும். காதலுக்கு வாக்கப்பட்ட ஆண் வர்க்கம் இல்லையா. அவள் மறையும் வரை இருந்த காதலின் உடல்மொழி இப்போது மாறி இருந்தது. கலங்கிய கண்களில் நீர்த்துளி உண்மை தான். ஆனாலும் துடைக்க வேண்டும் தானே.

அலைபேசி அடிக்க... எடுத்தேன்.

"என்னங்க... எங்க இருக்கீங்க..வரும் போது சிக்கன் மசால் ஒரு பாக்கெட் வாங்கிட்டு வாங்க... நைட்டுக்கு சிக்கன் கிரேவி வெச்சுக்கலாம்...." என்றாள் மனைவி. என் கால்கள் அங்கேயே நிற்கலாம். காலம் அங்கேயே நிற்காதே.

ஒரு பொய் காலத்தை அழகாக்கும் என்றால்... அது பொய்யா. வானவில் தானே.

காதலியையும் மனைவியையும் ஒருவராகவே இருக்க விடாத வாழ்க்கை... காதலனை மட்டும் காதலனாகவே இருக்க விடுமா என்ன.

—

கவிஜி.

---

# காதோடு கேட்பதெல்லாம்...!!

தார்பாய்கொண்டு மூடப்பட்ட
சிறுவாகனத்தில்
சிறிய இசையொலிகளை
காற்றில் மிதக்கவிட்டு
பாடல்களை பாடிக்கொண்டே
மெல்ல நகரும்
கண்பார்வையற்றோர் வாகனத்திலிருந்து
காதுகளில் வந்து விழுகிறது
ஒரு பாடல்
கண்ணோடு காண்பதெல்லாம்
கண்களுக்கு சொந்தமில்லை.....!

## உன் துரோகத்தை

கவிதைகளுக்குள் கூட
வைப்பதில்லை நான்
பாவம்
வார்த்தைகளுக்கு
வலிக்குமென்று
விட்டுவிடுகிறேன்...!

## வானம் கொட்டட்டும்

சாலைகளில் தண்ணீர்
ஆறுபோல ஓடுகிறது என்கிறார்கள்
உண்மைதான் அது ஓடிக்கொண்டிருந்த
இடம்...

குடியிருப்புகளில்
குளம்மென தேங்கிக்கிடக்கிறது
மழைநீர்
தவறாகச்சொல்கிறோம் அதற்குமுன்பு
அது குளம் குடியிருந்த இடம்

இரண்டாம் மாடிவரை
வெள்ளம் ஏறிப்பிடித்ததென
சொன்னார்கள்
மறுப்பதற்கில்லை
அது ஏரி வாழ்ந்த இடம்தானே!

வெள்ளம் வாரிக்கொண்டு போகிறது
என்கிறார்கள்
சரிதான்
வாரிகள் அதன் பாதையல்லவா

ஆறு குளம் ஏரிகளில்
தன் மூதாதையர் வாழ்ந்த வீடுகளைத்
தேடி ஓடிய மழைநீர்
திகைத்துக்கிடக்கிறது
அங்கு யாரோ குடியிருப்பதைக் கண்டு

மானிடா
நீருக்கும்
காற்றுக்கும்
வழிவிட்டுப்பழகு
உனக்கு மட்டும்
சொந்தமில்லை
இப்பூவுலகு..

## வானவில்லின் எட்டாவது நிறம்....!

மழைக்காட்சி ஒன்றை
வரைகிறது குழந்தை
அதில் வானவில்லையும்
சேர்த்து விடவேண்டுமென்ற ஆசையில்
ஏழு நிறங்களுக்கான கோடுகளை
வரையும்போது
எண்ணிக்கையில் எட்டுவரிகள்
வந்துவிட்டதை கவனிக்காது
வண்ணம்தீட்டி வைத்துவிட்டு
நிறங்களை எண்ணிப்பார்க்கிறது
எட்டு நிறங்கள் வந்துவிட்டதைக் கண்டு
ஐயே... என்று
வாயில் விரல் கடித்து சிரித்துவிட்டு
அழிக்கமுடியாது விட்டுவிட
வானவில்லின் எட்டாவது
நிறமாகிக்கிடந்தது அம்மழலை...!

—

நேசன் மகதி

---

## புதுக்கவிதைப் பூக்கள்

ஒவ்வொரு பூக்களாய் அமர்ந்து
நிறங்களை சரிபார்த்துக் கொண்ட
வண்ணத்துப்பூச்சிகள்
கடைசியாய் அமர்ந்தது என்னவளின்
கருப்பு வண்ண தாவணியில்.

/
உன் நினைவுகளைத் தவிர;
உன்னுடையதென்று ஏதுமில்லை
என்னிடத்தில்.

/
என்னைப் பிளந்து ஊறும்
உன் நினைவுகள் சிந்தாமல்
சிதறாமல் இருக்கவே
அசையாமல் ஆடாமல் இருக்கிறேன்.



/
என்னை எடுத்து வை.
நீ உன்னிடம் இல்லாத
போது;
உனக்கு உதவியாய்
இருப்பேன் நான்.

/
எனது வெற்றி உனது
வேகத்தைக் கூட்டுமென்றால்;
அதற்காக முதலில்
மகிழ்பவன் நான்தான்.

/
உயரத்திலிருப்பவன்
பள்ளம் பார்த்து மிரள்கிறான்.
பள்ளத்திலிருப்பவனோ
உயரம் கண்டு அஞ்சுகிறான்.

/
காற்புள்ளியைத் தொடர்ந்து
கவிதையில் வலுக்கிறது கலகம்.
நியாயம் கிடைக்கப் பெற்றதும்
முற்றுப்புள்ளியிட்டு
முடிவுறும் கவிதை.

/
புரிதல் என்றும்
சிரமம் தான்.
புரிந்து கொண்டால்
சுகம் சுலபம்.

/
நிறத்தில்
ஒன்றுமில்லை.
ஆயிரமும் அகத்தில்.

/
உனது வருகைக்காக;
எனக்கு முன்பிருந்தே
காத்துக் கொண்டிருந்தன;
அந்தப் பூங்காவில் பூக்களும்,
இருக்கைகளும்.

/
கொண்டு வந்த வார்த்தைகளில்
பாதியைக் கொட்டிவிட்டாய்.
மீதியைத்தா; உனக்கானவோர்
இரவுக்கவிதைப் புனைய
ஏதுவாகுமெனக்கு.

/
நீயே கதியென்று
என்னைத் தொலைத்து விட்டு
வந்திருக்கிறேன்.
நீயும் என்னைத் தொலைத்து விடாதே!

/
நிர்வாணத்தை விரும்புகிறவன்
இருட்டை மட்டுமே
நேசிக்கிறான்.

/
மறுமுறை
உன்னைப் பார்க்கும் போது
மனிதாபிமானம் கொண்ட
நபராய்ச் சந்திக்க விரும்புகிறேன்
உன்னை.

/
தண்டனை
கிடைத்திருக்கிறதென்றால்
தர்மத்தை மீறியிருக்கிறாய்
என்றுதானே அர்த்தம்.

/
என்னை நிரப்பியவனுக்கு
மட்டுமே தெரியும்
என் கொள்ளளவின் ரகசியங்கள்.

/
கவிழ்த்துப் பிடித்த பூவில்
துளியும் சிந்தவில்லை
தேன்.

—

பாரியன்பன் நாகாஜன்,
குடியாத்தம்.
கைப்பேசி: 9443139353

# இறை எங்கே?

இரை தேடும்
பறவை நான்
இறை எங்கே
தேடி அலைகின்றேன்
இரை தேடி
கிடைக்கவில்லை எனக்கு

இரை எங்கேயென
கேட்டிட வேண்டும்
இறை எங்கே
தேடி அலைகின்றேன்
இரை தேடி
களைத்துப் போனேன்

இளைப்பாற மரம்
நாடி வந்தேன்
மரம் அங்கில்லை
மரம் எங்கேயென
கேட்டிட வேண்டும்
இறை எங்கே
தேடி அலைகின்றேன்

களைப்பு நீங்க
நீரருந்த குளம்
நாடி சென்றேன்
குளம் அங்கில்லை
குளம் எங்கேயென
கேட்டிட வேண்டும்
இறை எங்கே
தேடி அலைகின்றேன்

மயங்கி வீழ்ந்தேன்
மரணித்தும் போனேன்

இடுகாட்டில் புதைந்திட
இடுகாடும் அங்கில்லை
இடுகாடு எங்கேயென
கேட்டிட வேண்டும்
இறை எங்கே
தேடிட வந்தான்

தேடி வந்த
இறைவனிடம் சொன்னேன்
இறைவா ஐந்தறிவு
சீவனோடு படைப்பை
நிறுத்தியிருக்க வேண்டும்

ஆறறிவு மனிதனை
படைத்து ஓரறிவு
முதலாக ஐந்தறிவு
ஈறாக இருக்கும்
உயிர்களின் அழிவுக்கு
வித்திட்டது ஏனப்பா

இயற்கையும் சீரழிந்து
பருவகாலம் பொய்த்து
நிலத்தடிநீர் குறைந்து
புவியும் வெப்பமாய்
பற்றி எரியும்
நாளும் நெருங்குது
நீயறிவாயா இறைவா

நீயறியாது இருந்தால்
நீயும் மனிதனே
சொல்லிவிட்டு காற்றில்
கரைந்து போனது
பறவையின் உயிர்

## கவலை

நரித்தனங்கள் செய்திட

நாலாப்புறமும் அலையும்
சிரித்த முகமாய்
சலனத்தைக் கொடுக்கும்
விரித்திடும் வலையை
விழுங்கத் துடிக்கும்
கரிமுக உருவமாய்
கனத்தைக் கொடுக்கும்

## தீர்வு

மூலப்புற்றுப் பாம்பை
முடுக்கி விட்டிட
உச்சிக்குச் சென்று
சுழன்று வருமே
தவமாய் தவமிருந்து
தனித்திரு விழித்திரு
சீவனுள் இருக்கும்
சிவனை உயிர்த்திடு
மனமும் இலகுவாகும்
தினமும் மகிழ்வாகும்

—

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

---

# ஆறாவது சினம்

சிறை கைதியாய்
அகப்பட்டே கிடக்கிறேன்.....!
சில்லறை துட்டாய்
சிதைந்து கிடக்கிறது.......!

கல்லறைக்கு சென்று விடுமோ
என் தீராத பசியின் வேகம்.....!
என் ஆசைகளும் கனவுகளும்
ஆசையின் மீட்சியால்
அகப்பட்டு கொண்டேன்......!

அயல்நாட்டு வேலையில்
அண்டை வீட்டு இளங்கன்றாய்
திரையில் தினமும்
என் மகளின் உருவம்.....!

உருவமில்லா பொம்மைகளிடன்
எனது உணர்ச்சிகளைக் கூறி
ஆறுதல் படுத்தி கொண்டேன்.....!

வேட்கை தீ முற்றம் சுற்றி பிடித்தாலும்
முரண்பாடாய் திரிந்து அலைந்தது
எனது குடும்ப அங்கத்தினரின்
முகங்களும் காட்சி பிழைகளும்......!

சிரத்தையுடன் சிரமங்களை கடந்தேன்...!
ஆறாய் பெருக்கேடுத்து ஓடுகிறது
ஆனந்த கண்ணீர்.....!

ஆழ் மனதில் ஆறாதா வடுவாய்
ஆறாவது சினம்.....!

--

ச. சத்தியபானு



# தன்முனையியைபுக் கவிதைகள்

*1*
அணைத்துச் செல்லுமொரு
கரமே அழகாகும்.
அன்பாலான உறவுகள்
அவணியில் வரமாகும்.

*2*
அனைத்தும் அவளாகி
அணைத்துக் காக்கிறாள்.
துயரைத் தனியாக
மனசுக்குள் சுமக்கிறாள்.

*3*
கசப்புக்களை கைமாற்றும்
சுயநல மானிடர்.
விசத்தின் சாயலில்
முளைக்கும் பேரிடர்.

*4*
துக்கத்தைத் துரத்திட
தேவையொரு நேசம்.
இதயத்தில் படரும்
இனிமையின் வாசம்.

*5*
பூக்களின் மலர்ச்சியில்
பூமியில் புத்துணர்ச்சி.
பாக்களின் சங்கமத்தில்
எனைத் தழுவும் மகிழ்ச்சி.

*6*
பொல்லாத மனங்களின்
படர்ந்திருக்கும் கருமை.
நல்லோரை வீழ்த்திடலே
நயவஞ்சகர் வழமை.

*7*
செலுத்திடும் கரிசனையில்
காரியங்கள் எளிதாகும்.
சீரான நோக்கத்தில்
சாதனைகள் உருவாகும்.

*8*
கண்ணீர் வரும்போதெல்லாம்
கவிதையும் வருகிறது.
நினைவுகள் நீங்காமல்
உள்ளத்தை ஆழ்கிறது.

*9*
நெருப்பாய் வார்த்தைகள்
தவறியும் சொல்லாதே.
வெறுப்பை உள்ளத்தில்
விதைத்துச் செல்லாதே.

*10*
அதிசயமொரு நாள்
நிகழுமென்ப தென் நம்பிக்கை.
இறைவா அடியொட்டி வாழ்கிறேன்
தினமும் உன் வாக்கை.

*11*
சாதலில் உயிர்ப்பிக்கும்
சில மனங்களில் ஈரம்.
கைசேதம் என்றுரைப்பர்
கசப்பாய்க் கடத்திய நேரம்.

—

மக்கொனையூராள்

# உள்ளங்கைக்குள் ஆகாயம்

*உழவனின் உயிர்நீரை
குடிக்கிறது
கடன்

*உயர்த்திய தமிழை
பள்ளத்தில்
புதைக்கிறார்கள்

*பெண்ணின் கண்ணீர்
காட்டாற்று வெள்ளைத்தைவிடவும்
ஆபத்து

*தண்ணீர் இல்லையென்றால்
ஏழைக்குக் கண்ணீரும் இல்லை

*தொல்லைகளை நிர்வகிப்பவனே
நிர்வாகி

*பொய்க்கு வெள்ளையடிக்க முடியாது

*புன்னகைக்கு அருகில்
நெருப்பு வைத்தால்
குளிரும்

*அப்பாவின் வியர்வை
நல்ல மகனுக்கு
அத்தர் வாசம்

*சீர்வரிசைக்கு
அறிவில்லை

*கல்வி
பணத்தை நோக்கியே
ஓடிக் கொண்டிருக்கிறது

*டியூசன் வகுப்புககளில்
பணம்
படிக்கிறது

*பகை நெருப்பில்
நீரை ஊற்றினாலும்
எரியும்

*சமூகத்திற்கு லட்சம் கண்கள்
பார்வையிலிருந்து
யாரும் தப்ப முடியாது

* சிறுவன் கால்களில்
நேர்வழியை
இணைத்து விடுங்கள்

*ஏழையிடம் இல்லையென்று
சொல்லாதே
நல்ல இதயம் இருக்கிறது

*காதல் வண்டியை
திருமணம் வரை
ஓட்டிச் செல்ல வேண்டும்

*சந்தையில் இருந்து கொண்டு
அமைதியைத் தேடாதே

*அன்பிலிருந்து
ஆரம்பிக்கும் கல்வி
ஒளியூட்டும்

*கையில் ரப்பர் வளையலுடன்
நகை கடை முன்னே
ஏழைச்சிறுமி

*நட்புக்கு
சட்டைப்பை கிடையாது

*தூரத்திலிருக்கும் பணத்தை நோக்கி
வாழ்க்கை
ஓடிக்கொண்டிருக்கிறது

*வசதியான வாழ்க்கை நோக்கி
மீனவனுக்கு நீந்தத் தெரியவில்லை

*கார் வாங்க நினைப்பவன்
முதலில்
கடன் வாங்குகிறான்

*தண்ணீரைக் குடித்து
கண்ணீரை விடுகிறாள்
ஏழைத்தாய்

*பாட்டிக்கு ஊன்றுகோல் மட்டுந்தான்
சொத்து

*உண்மையின் சிறகை
உடைத்தாலும்
பறந்து வரும்

*வியாபாரி
பொய்யை விற்று
பணத்தை வாங்குகிறான்

*செருப்புத் தைப்பவனிடம்
பேரம் பேசினான் உலோபி

*முட்டாளை நேசிக்கும் உலகம்
அறிவாளியை எட்டி உதைக்கிறது

*செல்வந்தன் பைத்தியக்காரனாக
இருந்தாலும்
உலகம் கொண்டாடுகிறது.

—

*ராஜகவி,* இலங்கை.

---

## உயர்ந்து செல்ல...

கண்ணிலே அன்பிருந்தால்
நீ கருணை கடலென்பர்,

பேச்சிலே பண்பிருந்தால்
பெருந்தலைவன் நீயென்பர்,

உழைப்பினில் ஓய்வில்லை என்றால்
உண்மையான தலைவனென்பர்,

பசித்தவர் வந்துவிட்டால் வழங்கிடும்
உணவே உன்னை
தாயென வணங்கி நிற்கும்

கல்விதனை வேண்டுவோர்க்கு
உதவிகள் செய்து வந்தால்
எங்கள் குரு நீதானென்பர்,

உலகினில் அமைதி வேண்டி அயராது
உழைத்து வந்தால்
உலகின் தலைவன் என்று போற்றியே
பாடி நிற்பர்,

அன்னை மேல் அன்பு கொண்டால்
உலகமே உனதென்பர்..

- எம்.என். பாஸ்கரன்,
(ஓய்வு - கிராம நிர்வாக அலுவலர்)
மன்னை.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.